# பாடல்வழிச் சொல்வளத்தைப் பெருக்குதல்
# பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 2 'ஏன் சிவப்பு?'

**கண்ணோட்டம்:**

பலவகை ஆடைகள் என்னும் பாடலை இசையுடனும் அசைவுகளுடனும் பிள்ளைகளைப் பாடச் செய்வதால் மாணவர்கள் இப்பாடத்தைப் படிக்க ஆர்வங்கொள்வார்கள். பின்னர், பிள்ளைகள் இப்பாடலையொட்டிய கலந்துரையாடலின்வழிப் பல புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் தெரிந்துகொள்வார்கள்.

**கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்**

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் ஈடுபாட்டுடன் பங்கேற்றல்**

✓ பாடலில் இடம்பெற்றுள்ள அசைவுகளைச் செய்தல்

2. **தாய்மொழி நடவடிக்கைகளை விரும்புதல்**

✓ பாடல்களில் கவர்ந்த வரிகளை ஒப்பித்தல் அல்லது பாடலுக்கு ஏற்றவாறு அசைவுகளைச் செய்தல்

✓ பாடல்களைக் கேட்கும்போதும் பாடல்களைப் பற்றி உரையாடும்போது எதிரில் இருப்பவரோடு கண் தொடர்பு கொள்ளுதல்

**கற்றல் குறிக்கோள் 2: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்**

1. **புரிந்துணர்வுடன் கேட்டல்**

✓ பாடல்கள் பாடும்போது பொருத்தமான அசைவுகளையும் செய்கைகளையும் செய்தல்

## கற்றல் குறிக்கோள் 3: நம் பல்லினப் பண்பாட்டைத் தெரிந்துகொள்ளுதல்

### 1. பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் தெரிந்துகொள்ளுதல்

✓ பாடல் எடுத்துரைக்கும் அறநெறிப் பண்புகள் குறித்த தங்கள் எண்ணங்களை / சிந்தனைகளை வெளிப்படுத்துதல்

**படிநிலைகள்**

1. நீங்கள் **பலவகை உடைகள்** என்னும் பாடலைப் பிள்ளைகளிடம் அறிமுகம் செய்யுங்கள்.

**பலவகை உடைகள்**

வீட்டில் அணிய ஒருசட்டை;
விளையாட் டிற்கும் ஒருசட்டை;

மழையில் உடுத்த ஒருசட்டை;
மகிழ்வாய் உலவ ஒருசட்டை;

பள்ளி செல்லச் சீருடையாம்;
பண்பாட் டிற்கும் ஓருடையாம்!

இப்படி உடைகள் பலவுண்டே!
எல்லாம் நமக்குப் பயன்படுமே!

**- முரசு நெடுமாறன்**

2. நீங்கள் பிள்ளைகளைப் **பலவகை உடைகள்** என்னும் பாடலை உங்களுடன் இணைந்து உற்சாகமாகவும் அசைவுகளுடனும் பாடச் சொல்லுங்கள்.





பிள்ளைகள் உற்சாகமாகவும் அசைவுகளுடனும் பாடுதல்

3. நீங்கள் **பலவகை உடைகள்** என்னும் பாடலில் கூறப்படும் ஆடைகளைப்பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள்.

   - ✓ **நீங்கள் இம்மாதிரியான ஆடைகளை அணிந்திருக்கிறீர்களா?**
   - ✓ **உன்னுடைய குடும்ப உறுப்பினர்கள் அல்லது அண்டை வீட்டுக்காரர்கள் இம்மாதிரியான ஆடைகளை அணிந்திருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா?**

4. நீங்கள் வெவ்வேறு சூழ்நிலைகளுக்கேற்ப ஆடைகளை அணிந்திருக்கும் மனிதர்களின் படங்களைத் தயாரித்து வைத்துக்கொள்ளுங்கள். (எ.கா: தீயணைப்பாளர்) அப்படங்களைப் பிள்ளைகளிடம் காட்டுங்கள். பின்னர், கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

   - ✓ **இவர்கள் என்ன ஆடை அணிந்திருக்கிறார்கள்?**
   - ✓ **இவர்கள் எப்போது இந்த ஆடையை அணிவார்கள்?**
   - ✓ **உங்களுக்கு இந்த ஆடைகள் அணிய ஆசையா? ஏன்?**

5. நீங்கள் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பிள்ளைகளின் எண்ணிக்கைகேற்ப பிரதியெடுத்துக்கொள்ளுங்கள்.
6. நீங்கள் பிள்ளைகளிடம் பிரதியெடுத்தப் படங்களைக் கொடுத்து அவர்களுக்குப் பிடித்த ஆடையை வெட்டி அந்தப் பொம்மைகளின் மேல் ஒட்டச் சொல்லுங்கள்.



பிள்ளைகள் தங்களுக்குப் பிடித்த ஆடையை வெட்டிப் பொம்மைகளின் மேல் ஒட்டுதல்

7. பிள்ளைகளைத் தாங்கள் தேர்ந்தெடுத்த ஆடைகளைப்பற்றிப் பேசச் சொல்லுங்கள்.





பிள்ளைகள் தாங்கள் தேர்ந்தெடுத்த ஆடையைப்பற்றிப் பேசுதல்



பாடல்களின்வழிப் பண்பாட்டுக் கூறுகளையும் அறிமுகப்படுத்தலாம்.

************************

பின்னிணைப்பு

## நடவடிக்கைத் தாள்











